கேகாலை மாவட்ட காரியாலயத்தினூடாக அழகுக்கலை நிபுணர்களுக்காக நடாத்தப்பட்ட RPL நிகழ்ச்சித்திட்டம்.



நயிடா தினத்தையொட்டி மாவட்டக் காரியாலய சூழலில் தர்ம போதனை புண்ணிய நிகழ்வு இடம்பெற்றது.

- அழகுக் கலை நிபுணர்களுக்கு RPL சான்றிதல் வழங்கும் நிகழ்வு வரக்காப்பொல தொழில்நுட்பக் கல்லூரியில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்டக் காரியாலயம்



கௌரவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க மற்றும் கௌரவ இராஜாங்க அமைச்சர் ரங்கே பண்டார ஆகியோர் கிளிநொச்சி பயிற்சி மையத்திற்கு வருகைத் தந்தனர்.



அதிமேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் உள்ளிட்ட அமைச்சரவை அமைச்சர்கள் SLGTI ற்கு வருகை தந்த போது.



ஜேர்மன் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் SLGTI ற்கு வருகை தந்தார். இது இராஜாங்க அமைச்சர் ரங்கே பண்டார, அதிகாரசபையின் தவிசாளர் உப தவிசாளர் மற்றும் பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் தலைமையில் கிளிநொச்சி மாவட்டக் காரியாலயத்தில் இடம்பெற்றது.

கொழும்பு மாவட்டக் காரியாலயம்

- தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் கொழும்பு மாவட்டக் காரியாலயத்தின் கீழ் செயற்படும் பயிலுநர் பயிற்சி மையத்தினது பயிலுநர்களால் இரண்டாம் தடவையாகவும் ஒழுங்கு செய்யப்பட்ட "கொவுல் ஹண்டய் - அவுருது எய்" சிங்கள புதுவருட கொண்டாட்ட நிகழ்வு மிகவும் சிறப்பான முறையில் மாவட்டக் காரியாலய வளாகத்தில் நடைபெற்றது.







பயிலுநர் பயிற்சி பெறும் பயிலுநர்களின் சிறந்த நன்நெறிகள், ஆன்மீகத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் வெசாக் உற்சவத்தை முன்னிட்டு கொழும்பு மாவட்டக் காரியாலயத்தின் ஊழியர்கள் மற்றும் பயிலுநர்கள் 150 பேர் வரையிலானோர் பங்குபற்றிய நிகழ்வில் தர்ம போதனை மற்றும் ஏனைய போதனைகளும் இடம்பெற்றன. நாளாந்த செயற்பாடுகளுக்கு மேலதிகமாக இளைஞர் யுவதிகளுக்கு இவ்வாறான நிகழ்வுகளின் ஊடாக நற் கருத்துக்களை வழங்குவது சிறப்பானது என வருகை தந்திருந்த போதனையாளர்கள் மற்றும் மதகுருமார்கள் குறிப்பிட்டனர்.

- மாவட்டக் காரியாலய வளாகத்தில் நடைபெற்ற ஆசிரியர் தின நிகழ்வில் பயிற்சி மைய பயிலுநர்களின் உயர் தரத்திலமைந்த நிகழ்ச்சிகள் இடம்பெற்ற காட்சி.





- 2015 நயிடா தினத்தை முன்னிட்டு காலை பிரித் நிகழ்வின் பின்னர் பயிற்சி மைய ஊழியர்கள் மற்றும் பயிலுநர்களினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இரத்த தான நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றதுடன் அன்றைய நிகழ்வுகளுக்கு பிரதான விருந்தினராக நயிடா நிறுவனத்தின் உப தலைவர் வருகை தந்திருந்த காட்சி.





- தொழிலற்ற இளைஞர் யுவதிகளுக்காக வெளியக அரச நிறுவனங்களுடன் இணைந்து தொழிலற்ற இளைஞர் யுவதிகளை தெளிவூட்டும் நடமாடும் வேலைத்திட்டமொன்று மாளிகாவத்த பிரதீபா மண்டபத்தில் நடைபெற்றது. இங்கு பெருமளவிலான தொழிலற்ற இளைஞர் யுவதிகள் வெவ்வேறு பாடநெறிகளுக்கு ஈடுபடுத்தப்பட்டனர்.

- கொழும்பு மாவட்டக் காரியாலயத்தின் முகாமையாளர் பயிற்சி அலுவலர் மற்றும் பரிசோதகர்களால் சமூகத்தினை தெளிவூட்டும் விசேட வேலைத்திட்ட தொடரானது சாலமுல்ல கிராம உத்தியோத்தர் பிரிவின் முல்லேரியா வடக்கு ஹேனவத்த விகாரை பஞ்சிகாவத்த கிராம உத்தியோத்தர் பிரிவின் மடபாத்த மற்றும் கபபொல கிராம உத்தியோத்தர் பிரிவின் கடுவளை சிங்கபுர போன்ற பிரதேசங்களை உள்ளடக்கி சிறப்பான முறையில் மேற்கொள்ளப்பட்டது.

புத்தளம் மாவட்டக் காரியாலயம்

- தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் புத்தளம் மாவட்டக் காரியாலயத்தினூடாக அம் மாவட்டத்தின் மனிதவள அபிவிருத்தி அதிகாரிகளுக்கு NAITA நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பில் தெளிவுபடுத்தும் விசேட செயலமர்வு இடம்பெற்ற போது.



- மாவட்டக் காரியாலயத்தனூடாக "நயிடா புதுவருட நிகழ்வு 2015" மிகவும் சிறப்பாக நடைபெற்றது.










வெசாக் உற்சவத்தை கொண்டாடும் வகையில் ஊழியர்கள் மற்றும் பயலுநர்களினால் வெளிச்சக் கூடுகள் அமைக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த காட்சி





- கொட்டாமுல்ல தையல் பயிற்சி நிலையத்தினூடாக பாடநெறியினை தொடர்ந்து நிறைவு செய்தவர்களால் தமது திறன்களை வெளிக்கொணரும் வகையில் பாரிய தையல் கண்காட்சி ஒன்று நடாத்தப்பட்டது.



➢ அழகுக் கலை நிபுணர் மற்றும் சிகை அலங்கார நிபுணர் பாடநெறிகளை பின்பற்றிய பயிலுநர்களின் திறன்களை வெளிக்கொணரும் ‘‘சிஹின சித்தம் 03’’ மணப்பெண் கண்காட்சி இடம்பெற்றது.



‘‘එසල’’ පෝයා දිනத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட சூப் தானம்.





பயிற்சி மையத்தில் கல்வி கற்கும் பயிலுநர்களின் அழகியற் திறன்களை வெளிக்கொணரும் வகையிலான ‘‘Glamour of NAITA 2015’’ கலை நிகழ்வு இடம்பெற்றது.



- புத்தளம் மாவட்டத்தில் பாடசாலையிலிருந்து இடைவிலகிய இளைஞர் யுவதிகள் மற்றும் தொழிலற்றோர்களைத் தேடி கிராமம் கிராமாக, வீடு வீடாகச் சென்று தொழிற் பயிற்சி தொடர்பில் தெளிவுபடுத்தல் நடவடிக்கைகளை ஆண்டு பூராகவும் நடைமுறைப்படுத்தியமை.

- மாவட்ட காரியாலயத்தின் வினைத்திறனை உயர்த்துவதனையும் விளைதிறனை மேம்படுத்துவதனையும் நோக்காகக் கொண்டு காரியாலயத்தினுள் 5s நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாடு ஆகஸ்ட் மாதம் ஆரம்பிக்கப்பட்டது.

மன்னார் மாவட்டக் காரியாலயம்



தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் மன்னார் மாவட்டக் காரியாலயத்தினூடாக "Vaani Vizha" எனும் தமிழர் உற்சவம் ஒக்தோபர் மாதம் மாவட்ட முகாமையாளர் உள்ளிட்ட ஊழியர்கள் மற்றும் பயிலுநர்களால் கொண்டாடப்பட்ட போது.



நயிடா தினத்தையொட்டி மாவட்டக் காரியாலயத்தினூடாக "Oli Vizha" நிகழ்வு கொண்டாடப்பட்ட போது.

வவுனியா மாவட்டக் காரியாலயம்.

- தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் வவுனியா மாவட்டக் காரியாலயத்தில் ICTT பாடநெறியினை பின்தொடரும் மாணவர்களால் ஆசிரியர் தின நிகழ்வு வவுனியா கணினி பயிற்சி மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



ICTT பயிற்சியினை நிறைவு செய்த பயிலுநர்களுக்கு வவுனியா மாவட்ட காரியாலயத்தின் ஊழியர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட பிரியாவிடை நிகழ்வின் போது.



ICTT பயிலுநர்களால் செப்தெம்பர் மாதம் கணினி தொழிற் பயிற்சி மத்திய நிலைய வளாகத்தில் சரஸ்வதி பூஜை இடம்பெற்ற போது.

- வவுனியா மாவட்டத்தில் NVQ – RPL இறுதி மதிப்பீடு திசெம்பர் மாதத்தில் இடம்பெற்ற போது.





மொணராகலை மாவட்டக் காரியாலயம்.



தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் மொணராகலை மாவட்டக் காரியாலயத்தினூடாக புத்தல Sten Grapher பயிற்சி மத்திய நிலையத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட புண்ணிய தான நிகழ்வின் போது.



நயிடா தினத்தையொட்டி மொணராகலை மாவட்டக் காரியாலயத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கிரிக்கற் போட்டியில் ஊழியர்களும் பயிலுநர்களும் மிகுந்த உற்சாகத்துடன் பங்குகொண்டனர்.



மாவட்டக் காரியாலயத்தின் மாவட்ட முகாமையாளர் ஊழியர்கள் மற்றும் பயிலுநர்கள் இணைந்து வருடாந்த சுற்றுலாவில் பங்கேற்ற போது.

அம்பாறை மாவட்டக் காரியாலயம்.

- தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் அம்பாறை மாவட்டக் காரியாலயத்தின் ஊடாக தேசிய சுதந்திர தின நிகழ்வு நடைபெற்றது.
- அம்பாறை மாவட்டக் காரியாலயத்தின் ஊடாக NVQ/RPL தெளிவுபடுத்தும் செயற்றிட்டமொன்று இடம்பெறும் சந்தர்ப்பம்



- வேலையற்ற இளைஞர்களுக்கு தொழிற் சந்தை 2015 நிகழ்ச்சி அம்பாறை மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற போது.

மட்டக்களப்பு மாவட்டக் காரியாலயம்.

- ஆரையம்பதி பிரதேச சபையில் பயிலுநர்களை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் 2005-09-28
- இளைஞர் யுவதிகளை தெளிவுபடுத்தும் வேலைத்திட்டம் - மகாஜனா கல்லூரி மட்டக்களப்பு



முன்னுரை

31.12.2015 திகதியில் முடிவுற்ற வருடத்திற்கான வருடாந்த கணக்குகள்

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

கீழ் தரப்பட்டுள்ள விபரப்படி, மீளாய்வுக்குரிய இவ்வருடத்தில் மொத்த மானியமான ரூபா 744,350,000/= அதிகாரசபைக்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன் ரூபா 59,173,718.62 வருவாயாக பெறப்பட்டுள்ளது.

	பகிர்வு (ரூபா.)	திறைச்சேரியினால் விடுவிக்கப்பட்ட நிதியங்கள் (ரூபா.)
மீள்நிகழ் செலவின மானியம்	685,000,000.00	685,000,000.00
மூலதன செலவின மானியம் -மு.கொ	289,100,000.00	125,762,347.02
	974,100,000.00	810,762,347.02
கூட்டுக : மதிப்பீட்டு வருமானம்	65,500,000.00	59,478,604.38
வருடத்திற்கான மொத்த வருமானம்	1,039,600,000.00	870,240,951.40

2015ம் வருடத்தில் ஏனைய முகவர்களிடமிருந்து பெறப்பட்ட உதவிகள் கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன :

	விடயங்களின் / நிதியங்களின் பெறுமதி
பெறப்பட்ட உதவி (மீள் நிகழ்வு) - அட்டவணை- 14 (பக்கம்- 44)	12,807,822.38
வேறுபட்ட வருமானம் - 13 (பக்கம்-43)	83,088,864.20
	95,896,686.58

கீழ்வரும் ஆவணங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன :

i. 2015 திசெம்பர் 31ம் திகதியில் ஐந்தொகை.
ii. 2015 திசெம்பர் 31ம் திகதியில் முடிவுற்ற வருடத்திற்கான வருமான செலவின கணக்கு.
iii. 2015 திசெம்பர் 31ம் திகதியில் முடிவுற்ற வருடத்திற்கான காசு பாய்வு கூற்று.
iv. 2015 திசெம்பர் 31ம் திகதியில் முடிவுற்ற வருடத்திற்கான நிதிமாற்றங்களின் கூற்று.
v. 2015 திசெம்பர் 31ம் திகதியில் முடிவுற்ற வருடத்திற்கான கணக்குகள் பற்றிய குறிப்புகள்.

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

31.12.2015ல் நிதி நிலைவரம்

	குறிப்பு	அட்ட.	பக் இல	31.12.2015 (ரூபா)	31.12.2014
ஆதனங்கள்					
நிலையான ஆதனங்கள்					
ஆதனம், பொறித்தொகுதி உபகரணங்கள்	**2**	**A**	**21**	902,143,388.12	980,565,405.51
முன்னேற்றமடையும் மூலதன வேலை	**3**		**21**	52,903,761.86	62,871,021.96
				955,047,149.98	1,043,436,427.47
நடைமுறை ஆதனங்கள்					
கையிருப்புகள்	**4**	**B**	**21**	9,221,116.62	9,643,027.70
பெறுதற்குரியவை	**5**	**C**	**22**	95,679,026.47	144,655,897.35
வைப்புகள், முன்கொடுப்பனவுகள், முற்பணங்கள்	**6**	**D**	**25**	17,389,851.69	19,731,699.98
முதலீடு	**7**		**29**	109,566,433.18	78,685,316.77
சங்கிரமத்திலான காசு	**8**		**29**	11,011,868.52	12,564,224.66
காசு & வங்கி மீதி	**9**		**30**	86,848,140.53	69,772,938.76
				329,716,437.01	335,053,105.22
பொறுப்புகள்					
நடைமுறை பொறுப்புகள்					
கொடுப்பனவுக்குரியவை	**10**		**31**	80,894,030.88	106,252,678.37
தேறிய நடைமுறை ஆதனங்கள்				248,822,406.13	228,800,426.84
மொத்த ஆதனங்கள்				1,203,869,556.11	1,272,236,854.31
உரிமமும் கடன் பொறுப்பும்					
தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி நிதியம் மூலதன ஒதுக்கம்	**11**		**39**	200,480,763.61	293,634,964.45
				200,480,763.61	293,634,964.45
நடைமுறையல்லா பொறுப்புக்கள்					
பணிக்கொடைக்கான ஏற்பாடு	**12**		**43**	217,081,936.13	175,001,136.13
மாறுபடும் வருமானம்	**13**		**43**	786,306,856.37	803,600,753.73
				1,203,869,556.11	1,272,236,854.31

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

31.12.2015 ல் முடிவுற்ற வருடத்திற்கான நிதி நிறைவேற்றம்

	குறிப்பு	பக் இல	2015 (ரூபா)	2014 (ரூபா)
வருமானம்				
அரசாங்க மானியம் - மீள் நிகழ்வு			685,000,000.00	650,000,000.00
அரசாங்க மூலதன மானிய மாற்றம்			5,037,711.65	29,848,757.75
திறன் துறை அபிவிருத்தி			101,905,726.00	116,482,385.97
உற். அல. மற்றும் பகு. பாட. நெறியில் இருந்து இலாபம்	11(b)	40	2,025,584.69	3,127,901.83
மாறுபட்ட வருமான மாற்றம்	13	43	83,088,864.20	91,520,101.09
ஏனைய உதவி - மீள் நிகழ்வு	14	44	12,807,822.38	10,567,167.44
ஏனைய வருமானம்	15	45	59,478,604.38	64,272,409.66
மொத்த வருமானம்			949,344,313.31	965,818,723.74
கழிக்க : செயற்பாட்டு செலவீனங்கள்				
பயிற்சி செலவீனங்கள்				
தொழிற்பயில் கொடுப்பனவுகள்	16	47	9,989,308.99	13,346,013.65
பயிற்சி நுகர்வு பொருட்கள்	17	47	119,392,288.98	187,729,675.09
ஏனைய பயிற்சி செலவினங்கள	19	48	43,553,405.44	35,525,605.47
பதவியினர் ஆகுசெலவு	18	48	320,324,694.77	234,317,250.65
போக்குவரத்தும் தொலைத்தொடர்பும்	20	49	45,665,717.36	54,817,113.83
வழங்கல்களும் அலுவலக தேவைப் பொருட்களும்	21	49	12,731,734.96	8,327,222.87
உபகரண பராமரிப்பு	22	50	67,643,520.04	73,896,808.59
வளவுப் பராமரிப்பு	23	50	94,922,762.15	99,655,549.48
			714,223,432.70	707,615,239.62
நிருவாக மற்றும் நிதிச் செலவினங்கள்				
பதவியினர் ஆகுசெலவு	19	48	172,482,527.96	126,170,827.27
பதவியினர் ஆகுசெலவு – ஏனைய செலவினங்கள	19/1	48	23,451,833.70	19,129,172.17
போக்குவரத்தும்,தொலைத்தொடர்பும்	20	49	24,589,232.43	29,516,907.44
வழங்கல்களும் அலுவலக தேவைப் பொருட்களும்	21	49	6,855,549.59	4,483,889.24
உபகரண பராமரிப்பு	22	50	36,423,433.87	39,790,589.24
வளவுப் பராமரிப்பு	23	50	51,112,256.54	53,660,680.49
கணக்காய்வு கட்டணங்கள்			456,760.59	544,430.90
நிதியும் ஏனைய செலவீனங்கள்	24	50	4,497,659.93	4,473,463.78
			319,869,254.60	277,769,960.54
மொத்த செயற்பாட்டு செலவீனங்கள்			1,034,092,687.30	985,385,200.16
ஆண்டுக்கான தேறிய இலாபம்			(84,748,373.99)	(19,556,476.42)
ஏனைய பாரிய வருமானங்கள்				
மீள் மதிப்பீட்டு மிகை / (பற்றாக்குறை)				
வெளிநாட்டு உதவி மற்றும் சொத்துக்கள்				
செலாவணி மிகை / (பற்றாக்குறை)				
பணிக் கொடை மதிப்பீட்டு மிகை / (பற்றாக்குறை)				
நியாய விலை இலாபம் / (நட்டம்)				
நிகர பாரிய வருமானங்கள்				
தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி நிதியத்திற்கு மாற்றப்பட்ட மிகை / பற்றாக்குறை		39	(84,748,373.99)	(19,566,476.42)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை
திரட்டிய காசுப்பாய்ச்சல் கூற்று

ஆண்டு இறுதியின் போது	31.12.2015	31.12.2014
	ரூபா	ரூபா
செயல்பாட்டு நடவடிக்கைகள்		
ஆண்டிற்கான நிகர மிகை (பற்றாக்குறை)	(84,748,373.99)	(19,566,476.42)
சரிப்படுத்தல்கள்	2,979,535.76	
ஆண்டிற்கான பெறுமானத் தேய்வு	143,822,779.00	135,105,894.94
பெறுமானத் தேய்வு சரிப்படுத்தல்கள்	1,298,321.25	(281,124.64)
பணிக்கொடைக்கான நிதி ஒதுக்கம்	51,592,685.00	32,869,059.62
பணிக்கொடைகொடுப்பனவுகள்		(9,960,580.25)
நிலையான சொத்துக்களின் விற்பனையின் போதான இலாபம் (நட்டம்)	(3,917.04)	10,478.87
மூலதனக் கொடை வருமானக் கூற்றிற்கு மாற்றம்	(5,037,711.65)	(29,848,757.75)
அறவிட முடியா மற்றும் ஐயக் கொடுப்பனவு - ஊழியர் சேவையில் இல்லை	24,101.62	(209,185.38)
நிலையான சொத்துக்களின் விற்பனையின் போதான இலாபம் (நட்டம்)		(1,391,526.65)
கொடர்பான சரிப்படுக்சுல்கள்		
அறவிட முடியா மற்றும் ஐயக் கொடுப்பனவு கடன்கள் - வெவ்வேறான கடன்பெற்றோர்	1,624,985.51	54,298.29
பகுதி நேர வருமானத்தின் பெறுமானத் தேய்வின் நிகர மீள்பெறுகை	(227,457.88)	33,264.58
வழக்கற்ற கையிருப்பு ஏற்பாட்டு குறைப்பு		(4,689.18)
செயல்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான மிகை (பற்றாக்குறை)	111,324,947.58	106,810,656.03
செயல்பாட்டு மூலதனத்தின் இயக்கம்		
கடந்த வருட உதவி		
சரக்கு இருப்பு அதிகரிப்பு	(421,911.08)	1,746,096.18
IETன் எல்லை சுவர் தகர்ப்பு		
பெற்றுக்கொள்ளப்பட்ட உதவிகள்		
கையிருப்பில் அதிகரிப்பு/ குறைப்பு		
வரவுகளில் அதிகரிப்பு/ குறைப்பு	(48,976,870.88)	70,568,500.64
முற்கொடுப்பனவு மற்றும் முன்பண வைப்புக்களில் குறைப்பு	(2,341,848.29)	(16,313,320.66)
ஒத்திவைக்கப்பட்ட வருமான அதிகரிப்பு/ குறைப்பு	(8,422,096.10)	
செலுத்த வேண்டியவைகளின் அதிகரிப்பு/ (குறைப்பு)	21,443,900.79	(17,768,360.01)
சேர்ந்த செலவுகளின் அதிகரிப்பு/ (குறைப்பு)	3,914,746.70	(6,149,031.15)
இயங்கு நடவடிக்கைகளின் மூலம் உருவாக்கப்படும் தேறிய காசுப்பாய்ச்சல்	76,520,868.73	138,894,541.03
முதலீட்டு நடவடிக்கைகள்		
நிலையான சொத்துக்களின் விற்பனையில் இருந்து தொடரல்	11,219.00	7,236.00
நிலையான சொத்துக்களின் கையகப்படுத்தல்	(144,404,719.87)	(161,863,297.36)
நிலையான சொத்துக்கள் சேர்ப்பின் சரிப்படுத்தல்கள்	(388,781.00)	128,016.67
செயல்பாட்டிலிருக்கும் வேலைகளுக்கான இடைக்கால கொடுப்பனவு	(9,967,260.10)	(55,901,343.77)
	(154,749,541.97)	**(217,629,388.43)**
நிதியளித்தல் நடவடிக்கைகள்		
அரசாங்கத்தின் மூலதனக் கொடை	59,350,000.00	165,651,242.25
வீ.அ.அ யின் பற்றுச்சீட்டு		1,306,218.20
நூலக நிதியின் தேறிய குறைப்பு		(234,000.00)
இயங்கும் மாறுபட்ட கொடையின் சரிப்படுத்தல்கள்	(95,739,844.91)	(49,693,901.95)
நிதியளித்தல் நடவடிக்கைகளின் தேறிய காசுப்பாய்ச்சல்	**(36,389,844.91)**	**117,029,558.50**
காசின் தேறிய அதிகரிப்பு மற்றும் காசுக்கு இணையானவைகளும்	(114,618,518.15)	38,294,711.09
காலப்பகுதியின் தொடக்கத்தில் காசின் தேறிய அதிகரிப்பு மற்றும் காசுக்கு இணையானவைகளும்	161,022,480.19	
காலப்பகுதியின் இறுதியில் காசின் தேறிய அதிகரிப்பு மற்றும் காசுக்கு இணையானவைகளும்	**46,403,962.04**	**38,294,711.09**

காசு மற்றும் காசுக்கு இணையானவைகளின் மிகுதி பற்றிய பகுப்பாய்வு	2015	2014	ஆண்டில் மாற்றம்
காசு இடைத்தங்கல்	11,011,868.52	12,564,224.66	(1,552,356.14)
முதலீடுகள்	109,566,433.18	78,685,316.77	30,881,116.41
காசு மற்றும் காசுக்கு இணையானவைகளும்	86,848,140.53	69,772,938.76	17,075,201.77
	207,426,442.23	**161,022,480.19**	**46,403,962.04**

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை

பங்கு மாற்றங்களின் கூற்று

விபரிப்பு	ஒன்று திரட்டிய நிதி	பகுதி நேர கணக்குகளின் இலாபம்	பெற்றுக் கொள்ளப்பட்ட உதவிகள்	நூலக நிதியம்	மோட்டார் சைக்கிள் வருமான ஒதுக்கம்	IETI எல்லை சுவர் நிதி	பகுதி நேர மூலதன ஒதுக்கம்	பகுதி நேர கட்டுப்பாட்டு ஒதுக்கம்	புதுமதுர நிதியம்	MYASD நன்கொடை	மொத்தம்
01.01.2015 அன்று மிகுதி	(495,929,069.53)	49,765,848.93	717,117,964.73	93,730.75	7,270,139.28	2,306,218.20	8,673,421.40	4,336,710.69			293,634,964.00
இலங்கை அரசாங்கத்தின் மூலதன நன்கொடை	59,350,000.00										59,350,000.00
புதுமதுரவுக்கான உள்நாட்டு நன்கொடை	719,866.84								(719,866.84)		
MYASD யின் நன்கொடை	66,412,347.00									(66,412,347.00)	
ஆண்டின் இலாபம்		2,013,927.14									2,013,927.14
பதிவுக் கட்டணம்											
RDA யின் உள்நாட்டு நன்கொடை											
பகுதி நேர வருமானத்திலிருந்துஇடமாற்றம்							1,866,221.79	933,110.88			2,799,332.66
சரிப்படுத்தல் குறைபாடு	187,675.50										187,675.50
காலப்பகுதிக்கான தேறிய பற்றாக்குறை	(84,748,373.99)										(84,748,373.99)
மூலதன நன்கொடை வருமானக் கூற்றிற்கு இடமாற்றம்	(5,037,711.65)										(5,037,711.65)
பகுதி நேர வருமானம் இடமாற்றம்	(2,025,584.69)										(2,025,584.69)
புத்தகங்களின் கையகப்படுத்தல்											
பின்னடை நன்கொடை இடமாற்றம்	(65,794,966.85)										(65,794,966.85)
வருமானக் கூற்றிற்கு இடமாற்றம்	101,501.04										101,501.04
மொத்தம்	(526,764,316.32)	51,779,776.07	717,117,964.73	93,730.75	7,270,139.28	2,306,218.20	10,539,643.19	5,269,821.57	(719,866.84)	(66,412,347.00)	200,480,763.61

பொது கணக்கீட்டுக் கொள்கைகள்

1. உட்பொருளை அறிக்கைப்படுத்தல்.

இல. 971, ஸ்ரீ ஜயவர்த்தன புர மாவத்தை, வெலிக்கடை, ராஜகிரியாவில் அமைந்திருக்கும் தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை (இதன் பின் அமைப்பு என கூறப்படுவது) 1990ன் 20ம் இலக்க மூன்றாம்நிலை மற்றும் வாழ்தொழிற்கல்வி சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்டது.

2. தயாரிப்பு அடிப்படை

இவ்வமைப்பின் நிதிக் கூற்றுக்கள், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகள் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் ஆகியவற்றின் பிரகாரம் தயாரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை ரூபாக்களில் சமர்ப்பிக்கப்படும் இந்த நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

3. ஒப்பீட்டு தகவல்கள்

3.1 நிகழ்வுக்குரிய வருடத்தின் சமர்பிப்புகளுடன் இணங்குதல் அவசியமானவிடத்து முன்னைய வருடத்தின் எண்களும் சொற்தொடர்களும் மீளாக்கம் செய்யப்பட்டன

4. அரசாங்க மானியங்களும் உதவுத் தொகைகளும்

4.1 இவ்வமைப்பு தனது செலவினங்களுக்கு தங்கியுள்ள அரசாங்க மானியங்கள்
பெறுவனவுகள் அடிப்படையில் கணக்கீடாக்கப்பட்டுள்ளன. மீள்நிகழ் செலவினம் தொடர்பான மானியங்கள், வருமான செலவின கணக்கில் வரவாக முன்வைக்கப்பட்டுள்ளவிடத்து, மூலதன செலவினம் தொடர்பான மானியம் நேரடியாக தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி நிதியத்தில் வரவாக்கப்பட்டது.

4.2ஆதனங்களின் மாறல் வடிவத்திலிருந்த அரசாங்க மானியங்கள் பிற்போடப்பட்ட வருமானமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, ஆதனத்தின் பயன்பாட்டு வாழ்வுக்காலம் முழுதுக்குமான முறையான அடிப்படையிலான வருமானமாக அங்கீகரிக்கப்பட்டது.

5. ஆதனங்களும் பெறுமானங்களின் அடிப்படையும்

5.1 கையிருப்புகள்

பொதுவாக கையிருப்புகள் ஆகு செலவில் பெறுமானமாக்கப்பட்டு, அச்சிடப்பட்ட பொருட்களின் வழக்கொழிந்த கையிருப்புக்கு 5% பொறுப்பொதுக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

5.2 பெற வேண்டியவைகள்

தேறுமென எதிர்பார்க்கப்படும் தொகையில் பெறவேண்டியவைகள் கூறப்பட்டு, 31.12.2015ல் அதிகார சபையின் சேவையில் இல்லாத பதவியினரின் அறவிட முடியாத மற்றும் ஜயக்கடன்களுக்கு 100% பொறுப்பொதுக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

5.3 சொத்துக்கள் பொறித்தொகுதி உபகரணங்கள்

(அ). அங்கிகரிப்பும் அளவீடும்

சொத்து உறுப்படிகள் பொறித்தொகுதிகள் உபகரணங்கள் ஆகியன தேய்மானத்தை அல்லாது பழுது கூட்டத்தை கழித்து ஆகுசெலவில் கூறப்பட்டுள்ளன.

(ஆ). ஆகு செலவு

சொத்துக்கள் பொறித்தொகுதிகள் உபகரணங்கள் ஆகியவற்றின் ஆகுசெலவு, கொள்வனவு விலையையும் அவற்றின் உத்தேச உபயோகத்திற்கு தொழிற்படும்
நிலைக்கு கொண்டுவரும் யாதேனும் நேரடி சுமத்தலுக்குரிய ஆகுசெலவையும் உள்ளடக்கப்படுகிறது.
அதிகார சபையின் நிறைவேற்றங்களை மேற்கொள்வதற்கு அல்லது அதிகரிப்பதற்கு நிரந்தர தண்மையான சொத்துக்களை கொள்ளல் மேம்படுத்தல் விரிவாக்குதல் ஆகியவற்றுக்கு செலவிட்ட பின்தொடர் செலவினங்கள் மூலதன செலவினங்களாக கொள்ளப்பட்டன.

(இ). குறுகிய வாழ்வுள்ள பட்டியற் பொருட்கள்

குறுகிய வாழ்தகவுடையதும் மூலதனமாக்க முடியாததுமான பட்டியற் பொருட் உருப்படிகள் தற்பொழுது வருமான செலவீனங்களில் இருந்து பதிவழிக்கப்பட்டுள்ளது. இருந்த போதிலும் இவ்விடயங்களிள் கட்டுப்பாடு கருதி பொருட்பட்டியலாக்கப்பட்டு, பௌதீக கட்டுப்பாடு ஆக்கப்பட்டுள்ளது.

(ஈ) .தேய்மானம்

சொத்தின் பயன்பாட்டு வாழ்வு மீது நேர் கோட்டு அடிப்படையில் தேய்மானம் கணக்கீடாக்கப்பட்டுள்ளது.

	தேய்மான வீதம்
குத்தகைக்குட்பட்ட நிலம்	குத்தகை காலத்திற்கு
கட்டடங்கள்	5%
பொறிகளும் உபகரணங்களும்	10%
தளபாடங்களும் பொருத்தல்களும் அலுவலக உபகரணங்களும்	10%
கணனி ரூ. துணைக்கருவிகள்	25%
நூலக புத்தகங்கள்	10%
மோட்டார் வாகனங்கள்	25%

சொத்தொன்று உபயோகத்தில் உள்ள போது அதன் தேய்மானம் ஆரம்பித்து அது அங்கீகாரம் இழக்கும் திகதிக்கு முன் முடிவடைகிறது. ஆதன உருப்படிகள் பொறித்தொகுதிகள் உபகரணங்கள் அகற்றப்படுகையில் அல்லது அதன் உபயோகத்தினால் எதிர்கால பொருளாதார தன்மைகள் எதிர்பார்க்கப்படாதவிடத்து அங்கீகார இழப்பிலான யாதேனும் இலாபம் அல்லது நட்டம் அச்சொத்து அங்கீகாரம் இழக்கும் வருடத்தின் வருமான கூற்றில் உள்ளிடப்படுகிறது.

5.4 காசும் காசு சமனீடுகளும்

கைவசமுள்ள காசு, வங்கியிலான கோரிக்கை வைப்புகள் உடனடியாக தெரியும் காசுத்தொகையாக மாற்றக்கூடிய குறுந்தவணை உயர் திரவவாக்க முதலீடுகள் ஆகியன, காசும் காசுசமனீடுகளும் வரையறுக்கப்பட்டுள்ளன.

காசுப்பாய்வு கூற்று நிமித்தம் கைவசமும் வங்கியிலும் உள்ள காசு, குறுந்தவணை முதலீடுகள், சங்கிரமத்திலான காசு மற்றும் காசு சமனீடுகளாக கருதப்பட்டுள்ளன.

6. கடன் பொறுப்புகளும் பொறுப்பொதுக்கங்களும்

கோரியவிடத்து கொடுப்பனவாகுவதற்கானதும் ஐந்தொகை திகதியிலிருந்து ஒருவருடத்திற்குள்ளாகும் கடனாகுபவை, ஐந்தொகையில் நடப்பு கடன் பொறுப்புகளாக பாகுபடுத்தப்பட்டுள்ளன. ஐந்தொகைத் திகதிக்குப் பின் ஒரு வருடம் அல்லது அதற்கு மேலாக கொடுப்பனவாக்கப்படவிருப்பவை நடப்பல்லாக்கடன் பொறுப்புக்களாகும்

6.1 பணிக்கொடை ஏற்பாடு

எல்லா பணியாளர்களுக்கும் ஆரம்ப வருடத்திலிருந்து கொடுப்பனவாக்கப்படும் பணிக்கொடைக்கு பொறுப்பொதுக்கம் ஆக்கப்பட்டது. எனினும், 1983ன் 12ம் இலக்க பணிக்கொடைச் சட்டம் மற்றும் இல.நிரு.சேவை-16 ஆகியவற்றின் பிரகாரம் பணியாளர்க்கான கடன்பொறுப்பு தொடர்ந்த சேவையின் ஐந்து வருட பூர்த்தியில் ஏற்படுகிறது.

6.2 குறித்துரைக்கப்பட்ட உதவுத்தொகை திட்டங்கள்

இவ்வதிகார சபை பணியாளரின் மொத்த வேதனத்திலிருந்து 15% மற்றும் 3%க்கு குறையாத தொகையை முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் வழங்குகிறது.

7 வருமான செலவினக் கணக்கு

அரசாங்கத்திலிருந்து பெற்ற மானியம், மீளெழும் செலவினத்திற்கு பெற்ற உன்னாட்டு வெளிநாட்டு உதவிகள் மற்றும் அதிகாரசபையின் பலவித வருமானம் ஆகியவை வருமான செலவின கணக்கில் வரவுவைக்கப்பட்டுள்ளது. மூலதன மானியத்திலிருந்து மூலதன ஆதனங்களின் பாரிய பழுது பார்ப்புக்கும் விருத்தியாக்கலுக்கும் செலவிடப்பட்டு ஆனால் மூலதனமாக்கப்படாத தொகை, இலாப நட்ட கணக்கில் சுமத்தப்பட்டு, இதற்கு சமமானத் தொகை, மானியப் பெறுகை பேரேட்டு (மூலதனம்) கணக்கிலிருந்து மாற்றப்பட்டது.

செலவினத்தை மேவிய வருமானத்தின் மிகை / பற்றாக்குறை, நிலையான ஆதனங்களின் அறியப்பட்ட பொறுப்புகளும் தேய்மானத்திற்கு பொறுப்பொதுக்கம் ஆக்கப்பட்ட பின்னர் அடையப்பட்டது.

அதிகாரசபையை இயக்குவதிலும் அதனது மூலதன ஆதனங்களை பராமரிப்பதிலுமான எல்லா செலவினமும் வருமானத்தில் சுமத்தப்பட்டுள்ளது.

செயற்பாடுகளை இயக்குவதிலும் பராமரிப்பதிலுமான எல்லா செலவினமும் கீழ்வருமாறு விகிதமாக்கப்பட்டன.

பயிற்சி செலவினங்கள்	65%
நிருவாக மற்றும் நிதிய செலவினம்	35%

8 மூலதன செயற்பாடுகளும் உறுமுரிமை கடன் பொறுப்பு

எல்லா பொருள் பிரதான செயற்பாடுகளும் உறுமுரிமை கடன் பொறுப்புகளும் கவனங் கொள்ளப்பட்டு தேவையான சீராக்கல்களும் வெளிப்பாடுகளும் நிதிக் கூற்றில் ஆக்கப்பட்டுள்ளன.

9 ஐந்தொகைத் திகதிக்குப் பின்னான நிகழ்வுகள்

ஐந்தொகை திகதிக்குப் பின் நிகழ்ந்த நிகழ்வுகளின் பொருட்தன்மை கவனத்தில் கொள்ளப்பட்டு உகந்த சீராக்கல்கள் தேவையானவிடத்து கணக்குகளில் ஆக்கப்பட்டுள்ளன.

10. 27.07.2007ஆம் திகதிய PE/STBD/4/2007 பொது நிதிக் கடிதத்திற்கமைவாகவும் குறைவான ஒதுக்கீடு, சொத்து பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மீள் பெறுமதி என்பன மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

11. ஒத்திவைக்கப்பட்ட வருமானத்தின் அதிகரிப்பு / குறைவு ஆனது காசுப்பாய்ச்சல் கூற்றில் காசல்லாத நடவடிக்கை என்பதாக காட்டப்பட்டுள்ளது.

12. பின்வரும் அடிப்படையில் நிர்வாக சபையின் அனுமதியின் பேரில் கீழ்வரும் நிதியங்களுக்கு மத்திய நிதியம் மற்றும் பகுதி நேர கணக்குகளில் இருந்து ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரட்டப்பட்ட நிதியம்	35%
மூலதன தேவைக்கான நிதி	50%
கட்டாய தேவைக்கான நிதி	50%

மேற்காட்டியதற்கு மேலதிகமாக 40% இலாபம் மத்திய நிதியத்திற்கு நிர்வாக சபையின் அனுமதியின் பேரில் மாற்றப்படுகின்றது.

13. கீழ்வரும் நிதிநிலை செயற்திறன் அறிக்கைகளில் கடந்த வருடங்களின் கணக்குகளுக்கு உரிய சரிப்படுத்தல்கள் குறித்த அறிக்கைகளின் ஆரம்ப மிகுதிகளுக்கு பின்வருமாறு சரிப்படுத்தப்பட்டுள்ளன.

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி நிதியம்
பகுதி நேர மற்றும் கட்டண அறவீட்டு பாடநெறி கணக்கு
தலைமை அலுவலகம் மற்றும் மாகாணம்
உற்பத்தி மற்றும் கட்டண அறவீட்டு பாடநெறி கணக்கு IETI
உற்பத்தி மற்றும் கட்டண அறவீட்டு பாடநெறி கணக்கு AETI

14. மூலதன ஒதுக்கமாக அடையாளம் காணப்பட்ட தொகை நிலையான சொத்துக்கள் மற்றும் சரக்குகளின் விற்பனையிலான இலாபம் / நட்டம் ஆக தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி நிதியத்திற்கு 2015ல் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

මගේ අංකය எனது இல. My No. } වීඇවෛ/ඍ/එන්ඒජඑඒ/01/15/113

ඔබේ අංකය உமது இல. Your No. }

දිනය திகதி Date } 2017 මාර්ච් 01

தலைவர்,
தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபை

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகார சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை

தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, ஒன்றிணைந்த காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் தர மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 56(2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகார சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, . - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக் கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்க ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக் கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 முனைப்பழிப்புள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்களானவை தேசிய பயிலுநர் கைத்தொழிற்பயிற்சி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான செலுத்த வேண்டிய வாடகை ரூபா 180,000 தொகை கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தது.

(ஆ) வருடாந்த குத்தகை வாடகை ரூபா 99,000 மற்றும் காணி ஒன்றினை குத்தகைக்கு எடுத்த ஆரம்ப வைப்பு ரூபா 297,000 இனை காணிகளின் கீழ் மூலதனப்படுத்தப்பட்டிருந்தது.

2.2.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

3 பிரதேச அலுவலகங்களின் பேணப்பட்டிருந்த 3 வங்கிக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ள காசு மீதியை விட காசேட்டின் மீதி ரூபா 334,712 இனால் அதிகரித்திருந்ததுடன் மேலும் ஒரு கணக்கின் மீதி காசேட்டு மீதியை விட ரூபா 346,586 இனால் குறைந்துள்ளது.

2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 56,146,515 இற்கான கடன்பட்டோர் மீதியில் 05 வருடங்களை மிகைத்த ரூபா 3,088,709 இற்கான 35 கடன்பட்டோர் மீதிகளும், 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடைப்பட்டதாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 1,088,351 இற்கான 03 கடன்பட்டோர் மீதிகளுக்கும், 01 முதல் 03 வருடங்களுக்கு இடைப்பட்டதாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 51,969,455 தொகையான 34 மீதிகளும் காணப்பட்டன.

(i) 1995 ஆண்டு முதல் 2014 வரையான காலப் பகுதியில் அதிகார சபையினால் கொள்வனவு நடவடிக்கைகளுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 571,196 தொகையான முற்பணங்கள் மற்றும் அதிகாரசபையின் தேசிய நிலையம் ஒன்றிற்கு 2012 ஆண்டின் போது வழங்கியிருந்த ரூபா 763,476 தொகையான முற்பணங்கள் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஊழியர் கடன் மீதியில் நீண்ட காலமாக காணப்படும் சேவையை விட்டுச் சென்றுள்ள ஊழியர்களிடம் அறவிடப்பட வேண்டிய ரூபா 104,328 தொகையான கடன் மீதி மீளாய்வாண்டின் இறுதி வரை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 05 வருடங்களை விஞ்சிய ரூபா 252,895 தொகையான 9 கடன்கொடுத்தோர் மீதிகளும், 03 வருடங்களுக்கும் 05 இற்கு இடைப்பட்ட ரூபா 117,525 தொகையான 02 கடன்கொடுத்தோர் மீதிகளும் 01 வருடம் முதல் 03 வரையான ரூபா 12,766,539 தொகையான 45 கடன்கொடுத்தோர் மீதிகளும் மீளாய்வாண்டு இறுதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நானாவித கடன்பட்டோர் மீதியில் ரூபா 14,270,952 தொகை தலைமை அலுவலகம் மற்றும் 03 தேசிய நிலையங்கள் மற்றும் மாவட்ட மத்திய நிலையங்கள் இடையே ஏற்பட்டிருந்த உள்ளகக் கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்பட்ட மீதிகளாகும். அத் திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் மீதிகள் ரூபா 13,136,958 ஆகக் காணப்பட்டதுடன் அதில் அடங்கியுள்ள மேற்படி கொடுக்கல் வாங்கல்களினால் ஏற்பட்ட மீதிகள் ரூபா 8,256,064 தொகை ஆகும். இந்த உள்ளகக் கொடுக்கல் வாங்கல்களில் மீதான கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் இடையே 05 வருடங்களை மிகைத்திருந்த போதிலும் தீர்க்கப்படாதிருந்த ரூபா 815,596 தொகையான 14 மீதிகள் காணப்பட்டன.

(ii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்களின் மீதி ரூபா 43,942,849 ஆகக் காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 27,448,816 தொகை, மூன்று தேசிய பயிற்சி நிலையங்களின் பயிலுனர்களிடம் அறவிடப்பட்டிருந்த ரூபா 5,000 வீதமான திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புக்களினைக் கொண்டதாகும். அவற்றில் பயிற்சி முடிவடைந்து நிறுவனத்தில் இருந்து விலகிச் சென்றுள்ள பயிலுனர்களினால் திருப்பி பெற்றுக்கொள்ளப்படாத அண்ணளவாக ரூபா 10,000,000 இற்கான தொகை ஒன்றும் தீர்க்கப்படாமல் காணப்பட்டது.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு	இணக்கமின்மைகள்
(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை	
IX அத்தியாயத்தின் பிரிவு 2.2	அரச அலுவலர்கள் அலுவலக நேரத்திற்கு புறம்பாக நடத்திய விரிவுரைகளின் மூலம் கிடைக்கும் படிகளிலிருந்து 10 சதவீதம் அரச பங்காக திரட்டு நிதிக்கு செலவு வைக்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது ரூபா 2,658,079 தொகையான அதிகாரச் சபையில் பகுதி நேர பாடநெறிகளின் விரிவுரை கட்டணம் மீது ரூபா 265,807 இற்கான அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ)	இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை	
	(i) நிதிப் பிரமாணம் 396(ஈ)	வழங்கப்பட்ட ஆனால் வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை கடந்துள்ள ரூபா 510,100 கூட்டுத்தொகையான 09 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. அத்துடன் 05 வருடங்களுக்கு முன்னர் வைப்புச் செய்திருந்த போதிலும் தேறப்படாத ரூபா 26,211 தொகையான 17 காசுக் கட்டளைகள் தொடர்பாகவும் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.
	(ii) நிதிப் பிரமாணம் 702(3)	மீளாய்வாண்டின் போது மற்றும் முன்னைய ஆண்டுகளின் போது கையொப்பமிடப்பட்டுள்ள ஒப்பந்த வேலை உடன்படிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.
(இ)	2003 ஜூன் 02 திகதிய பீஈடீ 12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு	கணக்குகளுடன் வருடாந்த அறிக்கையின் வரைபு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.
(ஈ)	2006 இன் அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவையின் 1.2.1(இ) ஆம் பிரிவு	வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக மற்றும் பணிப்பாளர் சபையின் முன் அங்கீகாரமின்றி 11000 மொடியுலர்கள் அச்சிடுவதற்காக ரூபா 1,972,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ)	1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி அதிகாரச் சட்டத்தின் 53 ஆம் பிரிவு	தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி வழங்கும் நிதியம் எனும் பேரில் நிதியம் ஒன்று உருவாக்கப்பட்டு திறைசேரி மானியங்கள் உள்ளடங்கலாக அனைத்து வருமானங்களும் வரவு வைப்பதற்கு மற்றும் அனுமதிக்கப்பட்ட அனைத்து செலவுகளும் அதற்கு செலவு வைக்கப்பட்டு, மிகைப்பணம் திறைசேரியில் வைப்புச் செய்யப்பட வேண்டும். எவ்வாறாயினும் மத்திய நிதியம் (Central Fund) எனும் பெயரில் நிதியம் ஒன்று நிறுவப்பட்டிருந்ததுடன் அவற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகள் அதிகாரச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நடைபெற்றிருக்கவில்லை. அத்துடன் 2015 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதனது மீதி ரூபா 51,779,776 திறைசேரியில் வைப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை.
(ஊ)	2006 திசெம்பர் 22 திகதிய இலக்கம் பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை	திறைசேரியின் அங்கீகாரமின்றி அதிகாரசபையில் 06 நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு இந்த நிதியங்களின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 25,479,552 தொகை ஆகும்.

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 84,748,374 ஆன பற்றாக்குறையொன்றாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 19,566,476 ஆகக் காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 65,181,898 ஆன வீழ்ச்சியொன்று ஏற்பட்டுள்ளது. திறைசேரி மானியம் ரூபா 35,000,000 இனால் அதிகரித்து, பயிற்சி செலவினம் ரூபா 77,760,934 இனால் குறைவடைந்த போதிலும் தனிநபர் வேதனங்கள் ரூபா 151,042,770 இனால் அதிகரித்தமை மேறபடி வீழ்ச்சிக்கு முக்கியமான காரணமாகியிருந்தது.

மீளாய்வாண்டில் மற்றும் கடந்த 4 வருடங்களில் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்யும் போது 2011 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்ததுடன் 2014 ஆண்டின் போது ரூபா 19,566,476 ஆன பற்றாக்குறை

மீளாய்வாண்டு அளவில் ரூபா 84,748,374 தொகை வரை அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும், ஊழிய ஊதியங்கள் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு ஆகியன சீராக்கப்பட்ட பின்னர் 2011 ஆண்டின் போது ரூபா 278,586,424 தொகையான அதிகாரசபையின் பங்களிப்புத் தொகை மீளாய்வாண்டளவில் ரூபா 603,161,305 தொகை வரை தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது.

3.2 அதிகார சபைக்கு எதிராக அல்லது அதிகார சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்டச் சம்பவங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மூன்று ஊழியர்கள் தொடர்பாக ஊழியர் சேமலாப நிதியத்திற்கான கொடுப்பனவு செய்வதற்கு தவறுதல் மற்றும் சேவையைவிட்டு நீக்கியமை தொடர்பாக தொழில் திணைக்களத்தினால் அதிகாரசபைக்கு எதிராக 02 வழக்குகள் மற்றும் சேவையில் இருந்து நீக்குதல், பணிக்கொடை செலுத்தாமை மற்றும் ஊழியர் சேமலாப மிகைவிதிப்பு அறவீடு செய்தல் தொடர்பாக நான்கு அலுவலர்களினால் அதிகாரசபைக்கு எதிராக 03 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

(ஆ) அதிகாரசபைக்குச் சொந்தமான வெல்லவத்த பயிற்சி நிலையத்தின் காணியின் உரித்து தொடர்பாக அதிகாரசபையினால் வெளிசாரார் ஒருவருக்கு எதிராக வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1990 இன் 20 இலக்கம் கொண்ட மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு அதிகாரச் சட்டத்தின் 37(1) ஆம் இலக்க பந்தியின் பிரகாரம் அதிகார சபையின் குறிக்கோளாகிய தொழிற்பயிற்சிகளைத் திட்டமிடல் மற்றும் வழங்குதல், பயிற்சி தரங்களை நிர்ணயித்தல், பரீட்சைகள் நடத்துதல் தொழில் பயிற்சி பற்றிய ஆய்வுகள் மற்றும் அபிவிருத்தி விடயங்களை மேற்கொள்ளல், பயிற்சி வழங்கும் இயலுமையை அபிவிருத்தி செய்தல் மற்றும் சமமான குறிக்கோள்களைக் கொண்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்களுடன் தொடர்புடைய சான்றிதழ்கள், டிப்ளோமா மற்றும் பட்டம் சித்தியடைவதற்காக கவனம் செலுத்துவதற்காக உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளல் மற்றும் வலுப்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டின் போது அதிகாரசபையினால் தொழிற்பயிற்சி தொடர்பாக ஆய்வுகள் மற்றும் அபிவிருத்திகள்

மேற்கொள்வதற்காக தேவையான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான செயல்நடடிவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிராத மற்றும் போதியளவில் நிறைவேற்றப்படாத விடயங்கள் பின்வருமாறு,

(i) செயல்நடடிவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 425 பயிலுனர்களுக்காக 40 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அத்துடன் திட்டமிடப்பட்டிருக்காத 21 பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன. அதற்காக 699 பயிலுனர்கள் பங்குபற்றியிருந்தனர்.

(ii) செயல்நடடிவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்டிருந்த போதிலும் ஆண்டின் போது நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருக்காத கைவிடப்பட்ட பயிற்சிநெறிகளின் எண்ணிக்கை 66 ஆகும்.

(iii) மீளாய்வாண்டின் போது பயிற்சிகள் வழங்குவதற்காக 27,000 பயிலுனர்களை சேர்த்துக்கொள்வதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும், 22,616 பேர்கள் மாத்திரமே சேர்க்கப்பட்டிருந்தமையால் பயிலுனர் சேர்வு குறைவடைவதற்கான காரணத்தை கண்டறிந்து அதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) வேறு தொழிற் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி பெறும் 35,000 பேருக்கு வேலையுடனான பயிற்சி வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் வேலையுடனான பயிற்சிக்காக அனுப்பியிருந்த 10,040 அதாவது 29 சதவீதமாக குறைந்த அளவே ஆகும். மேலும் பயிற்சி பெறுவோர் ஈடுபடுத்துவதற்காக சந்தர்ப்பம் ஒன்று உள்ள நிறுவனங்களைத் தொடர்பினை ஏற்படுத்துவதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் அதன் கீழ் எந்த செயற்பாடும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(v) மீளாய்வாண்டின் போது 150 உத்தியோகத்தர்களுக்கு தொழில்சார் வழிகாட்டல் செயற்பாடுகளுக்காக பயிற்சி வழங்குதல் இலக்காக இருந்த போதிலும் அது தொடர்பாக அதிகாரசபையினால் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) அதிகாரசபையின் பணிகளுக்காக 50 மதியுரையாளர்கள் மற்றும் 25 ஏனைய பதவியணியினரை ஆட்சேர்ப்பதற்கு இலக்கிடப்பட்டிருந்த போதிலும் அவ் ஆட்சேர்ப்பு ஏதும் இடம்பெற்றிருக்கவில்லை.

(vii) கைத்தொழில் உதவிச் சேவையினை அறிமுகப்படுத்துவதற்கான 5 உப செயற்பாடுகள் ஆண்டின் போது நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(viii) முன் கற்றவை பின்னர் இனங்காணல் (RPL) முறைமை தொடர்பாக அறிவூட்டும் 30 நிகழ்ச்சித் திட்டங்கள் ரூபா 1.25 மில்லியன் செலவில்

மேற்கொள்வது குறிக்கோளாக இருந்த போதிலும் 20 நிகழ்ச்சித் திட்டங்கள் நடத்தப்பட்டிருக்கவில்லை.

(ix) விஷேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 1000 பயிலுனர்களுக்கு பயிற்சி வழங்கத் திட்டமிட்டிருந்த போதிலும் 262 பயிலுனர்களுக்கு மாத்திரமே பயிற்சி வழங்கப்பட்டிருந்தது.

(இ) தொழிற் திறன் துறைசார் அபிவிருத்தி செயற்திட்ட உதவியின் கீழ் மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயலாற்றல் பின்வருமாறு.

(i) 2015 ஆண்டிற்கான முன் கற்றல் பின்னர் இணங்காணல் (RPL) முறைமையின் மூலம் 5000 சான்றிதழ்கள் வழங்குவதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் 532 சான்றிதழ்கள் மாத்திரமே வினியோகிக்கப்பட்டிருந்தன.

(ii) மீளாய்வாண்டின் போது 3 தேசிய மத்திய நிலையங்களில் மற்றும் 25 மாவட்ட மத்திய நிலையங்களில் தர முகாமைத்துவ முறைமை (ISO Standrad) இனை அமைப்பதற்கு மற்றும் நடாத்திச் செல்வதற்காக திட்டமிட்டிருந்த போதிலும் 2 நிலையங்களில் மாத்திரம் அவ் விடயங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

2014 ஜூன் 04 ஆம் திகதி ரூபா 4,974,144 தொகையொன்று செலவிடப்பட்டு தலைமை அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்த மின்தூக்கி 2015 செப்தம்பர் மாதத்தில் செயலிழந்திருந்தது. குறிப்பிட்ட தினத்தில் மின்தூக்கியை சேவை மேற்கொள்வதற்காக சேவை உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் அதனை சேவிஸ் பண்ணுவதற்காக ரூபா 92,877 தொகை ஒன்று செலுத்துவதற்கு அதிகார சபைக்கு நேர்ந்திருந்தது. எவ்வாறாயினும் 2015 செப்தம்பர் 29 ஆந் திகதி ரூபா 376,623 தொகை செலவிடப்பட்டு முன்னைய காலத்தையும் உள்ளடக்கிய வருடாந்த சேவை உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

4.3 தொழிற்படு செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது இரத்தினபுரி மாவட்ட அலுவலகத்தில் பயிலுனர்களுக்காக விற்பனை செய்வதற்காக வழங்கியிருந்த ரூபா 19,920 பெறுமதியான 498 பயிற்சி புத்தகங்களின் பற்றாக்குறையொன்று தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 ஆண்டின் போது மாத்தறை பகுதியில் ரூபா 35,125,261 தொகை ஒன்று செலவிடப்பட்டு தொழில் தேர்ச்சி அபிசேக நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடாத்தி அங்கு பயனற்ற செலவுகள் மேற்கொள்ளல் தொடர்பாக தீர்க்கப்படாத சிக்கல்கள் காணப்பட்ட போதும் மீளாய்வாண்டின் போது ரூபா 4,574,794 தொகை செலவிடப்பட்டு காலிப் பகுதியிலும் அவ்வாறான நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடாத்தப்பட்டிருந்ததுடன் அந்த நிகழ்ச்சித் திட்டத்தில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) முன் கற்றல் பின்னர் மதிப்பீடு செய்தல் (RPL) நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பயிலுனரின் திறமையை பயிற்சி அடிப்படையில் மதிப்பீடு செய்து தேசிய தொழில் தகைமைகள் மட்டத்திலான சான்றிதழ்கள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்ட போதிலும் காலியில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் போது பங்குபற்றும் கலைஞர்களுக்கு வினியோகிப்பதற்காக முறையான அங்கீகாரம் இன்றி ரூபா 1,255,950 தொகை பெறுமதியான 550 உபகரணத் தொகுதிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.

(ii) இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்காக விழா பண்டங்கள், உணவு வகை பானங்கள் வழங்குதல் மற்றும் விழா ஏற்பாடுகள் மற்றும் கட்டிடக்கலை நிபுணர்களுக்கு தேவையான மூலப் பொருட்கள் வழங்குதல் என்பன ஒன்றுக்கொன்று தொடர்பில்லாத விடயங்களாக காணப்பட்ட போதிலும் இவ் விடயங்களுக்காக ஒரே ஒப்பந்தம் ஒன்றினை வழங்குவதற்கு அதிகாரசபை நடவடிக்கை எடுத்துள்ளது. குறைந்த விலை கூறல் விலையை விட கூடுதலாக ரூபா 335,163 தொகை மிகையாக ரூபா 2,587,110 இற்காக விலைக்கு நிர்மாண வேலை மற்றும் கட்டிடப் பொருட்கள் விற்பனை நிலையம் ஒன்றிற்கு இந்த ஒப்பந்த வேலை ஒப்படைக்கப்பட்டிருந்தது.

(iii) இந்த நிகழ்ச்சித் திட்டத்தில் 250 கட்டிடக்கலை நிபுணர்களுக்கு மதிப்பளிக்கத் திட்டமிட்டு ரூபா 923,660 பெறுமதியான பண்டங்கள் கொள்வனவு செய்திருந்த போதிலும் வருகை தந்திருக்காத 72 வல்லுநர்களுக்கு மீதியாக இருக்க வேண்டிய பண்டங்களின் பெறுமதி மொத்த பண்டங்களின் பெறுமதியின் சதவிகிதமாக ரூபா 182,180 தொகையான பற்றாக்குறையொன்று அவதானிக்கப்பட்டது.

(iv) நிகழ்ச்சித் திட்டங்கள் முடிவடைந்த பின்னர் மேலதிகமாக வழங்கல்கள் சேவைகள் செய்யப்படாத ஒப்பந்தக்காரர்களின் வேண்டுகோளின் பிரகாரம் முறையான விதத்தில் பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் இன்றி உப தலைவரின் அங்கீகாரத்தின் மீது ரூபா 496,250 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது. மேலதிக் கூடாரங்கள், சிப்கற்கள், பால் பக்கற்கள் வழங்குவதற்காக அந்த மேலதிகச் செலவு இணங்கிய சமமான செலவுகள் மற்றும் சந்தை

விலைகளுடன் ஒப்பிடும் போது மிக கூடிய விலையாகும் என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

கட்டுபெத்த கைத்தொழில் பொறியியல் பயிற்சி நிறுவகத்தின் காட்சியறையை நிர்மாணிப்பதற்காக ஒப்பந்த வேலை பகிரங்க விலை கூறல் அழைத்தல் மேற்கொள்ளப்படாமல் வானவில் பக்கத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் ஒருவருக்கு ரூபா 19,774,540 தொகைக்கு 2014 அக்தோபர் 15 திகதி வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2015 மே மாதத்தில் காட்சி அறையின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட வேண்டும். எனினும் மீளாய்வாண்டு இறுதி வரை நிர்மாண வேலையை பூர்த்தி செய்து அதிகார சபைக்கு ஒப்படைத்திருக்கவில்லை.

4.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தாதிகள் உதவியாளர் பாடநெறி ஆரம்பிப்பதற்காக 2011 மற்றும் 2012 ஆண்டுகளின் போது 10 பயிற்சி நிலையங்களுக்கு வழங்கியிருந்த ரூபா 2,398,571 பெறுமதியான பண்டங்கள் அப் பாடநெறி ஆரம்பிக்கப்படாமையால் குறிப்பிட்ட நிலையங்களில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டது.

(ஆ) 2012 ஆண்டின் போது பிரதேச செயலாளர் ஒருவரினால் கல்முனை மாவட்ட அலுவலகத்திற்கு வழங்கியிருந்த ஒரு ஏக்கர் காணி 2016 செப்டம்பர் 30 திகதி வரை பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது.

(இ) 2014 ஆண்டின் போது குருநாகலில் நடைபெற்ற தொழில் தேர்ச்சி அபிசேக நிகழ்ச்சித்திட்டத்திற்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 1,464,848 இற்கான பயிற்சி உபகரணங்கள் காணப்பட்ட போதிலும், அந்த உபகரணங்கள் பயன்படுத்தாமல் மாத்தறையில் நடைபெற்ற அவ்வாறான நிகழ்ச்சித் திட்டம் ஒன்றிற்காக உபகரண இருப்பொன்று கொள்வனவு செய்திருந்ததுடன் அவற்றை பயன்படுத்தாமல் ஒருகொடவத்த களஞ்சியத்தில் செயற்படாது காணப்பட்டது.

4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஐஎஸ்ஓ (ISO) தரக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்காக பலவித வர்ணங்களில் ஆன பிளாஸ்டிக் கோவை அட்டைகள் 8,655 கொள்வனவு செய்வதற்காக தேவையான பண்டங்களில் மாதிரிகள் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவினால் ஏற்கனவே தீர்மானிக்கப்படாமல் குறைந்த விலை சமர்ப்பித்திருந்த வழங்குனர்களின் பண்டங்கள் தேவையான மாதிரிகளுக்கு இணங்கவில்லை என அறிவித்து குறைந்த விலையை விட ரூபா 771,131 தொகை மிகையான விலை சமர்ப்பித்திருந்த வழங்குனர் ஒருவரை தெரிவு செய்து ரூபா 3,793,434 இற்கான உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது.

2016 அக்தோபர் மாதம் அளவில் இந்த கோவை அட்டைகளில் ரூபா 2,955,644 பெறுமதியான 5781 கோவை அட்டைகள் தேவைக்கு ஒவ்வாமை மற்றும் வேறு காரணங்களின் அடிப்படையில் பயன்படுத்தியிருக்கவில்லை. அத்துடன் பாதுகாப்பான முறையில் களஞ்சியப்படுத்தியும் இருக்கவில்லை.

4.7 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த அதிகார சபையின் வளங்கள்

அதிகாரசபையின் இரண்டு ஊழியர்கள் வரிசை அமைச்சுக்கும் மேலும் 07 ஊழியர்கள் அமைச்சு பதவியணிக்கும் 03 மாத காலப் பகுதிக்காவும், ஒருவர் 2015 திசெம்பர் 09 திகதி முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2016 அக்தோபர் 25 வரையும் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

4.8 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 1358 மற்றும் உள்ளவாறான பதவியணி 869 ஆகக் காணப்பட்டமையால் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை 490 ஆகக் காணப்பட்டதுடன் அந்த பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. வெற்றிட பதவிகளில் விரிவுரையாளர்கள், பயிற்சி வழங்கும் அலுவலர்கள், மதியுரையாளர் மற்றும் பரிசோதகர் ஆகிய அங்கீகரிக்கப்பட்ட 784 கல்வி பதவிகளில் 353 பதவிகள் அதாவது 45 சதவீதம் வெற்றிடமாக காணப்படல் நிறுவனத்தின் பயிற்சி வழங்கல் மற்றும் பரிசோதனை நடவடிக்கைகள் மீது பாதகமாக தாக்கம் ஒன்றினை ஏற்படுத்துவதாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2011 ஆண்டு முதல் அதிகாரச சபையின் நிர்மாண வேலைகள் மற்றும் பராமரிப்பு பகுதியின் மற்றும் 2009 ஆண்டு முதல் வாகனங்களின் பராமரிப்பு விடயங்களுக்காக கடமைகள் சாட்டுதல் செய்தல் அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டு கணக்காய்வுத் திகதியாகிய 2016 ஒக்தோபர் 25 ஆந் திகதி வரையும் சேவையில் ஈடுபடுத்தியிருந்த போதிலும் அவ் விடயங்களுக்காக அதிகாரசபைக்கு நேரடியாக பொறுப்பு கூறக் கூடிய நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கடுபெத்த பயிலுனர் பயிற்சி நிறுவக்தைச் சேர்ந்த இலக்கம் 5/பீ1/01 கொண்ட உத்தியோகபூர்வ வாசஸ்தலம் வெளிச்சாராருக்கு வாடகை அடிப்படையில் வழங்குவதன் மூலம் அரச வளங்களை துஷ்பிரயோகம் செய்வதற்கு இடமளித்தல் என்ற குற்றச்சாட்டு மீது வேலை இடைநிறுத்தப்பட்ட கணக்காளர் ஒருவர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப விசாரணை அறிக்கை காணாமல் போயிருந்ததுடன், 2015 ஜனவரி 19 திகதி முதல் அவ் உத்தியோகத்தர் மீண்டும் சேவைக்கு அமர்த்தப்பட்டிருந்தார். மீண்டும் புதிதான ஆரம்ப விசாணைகள் நடைபெற்றுக்கொண்டு இருக்கும் போது அவ் உத்தியோகத்தருக்கு கொழும்பு பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் பட்டப்பின்படிப்பு பட்டதாரி பாடநெறி ஒன்றினை கற்பதற்காக ரூபா 122,500 தொகை ஒன்று அதிகாரசபையினால் வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) உரிய முறையில் முன் நிகழ்ச்சித்திட்டம் மற்றும் விடுமுறைகள் அங்கீகரிக்கப்படாமையால் மாவட்டத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவரின் 2013, 2014 மற்றும் 2015 ஆண்டுகளுக்காக சம்பளமற்ற விடுமுறை தினங்கள் முறையே 173 உம் 191.5 உம் மற்றும் 05 என 369.5 நாட்கள் ஆகியிருந்ததுடன் அற்காக செலுத்தப்பட்டிருந்த சம்பளத்தை கணித்து 2016 ஒக்தோபர் வரை அறவீடு செய்திருக்கவில்லை.

4.9 வாகனப் பயன்பாடு

அதிகாரசபையின் வாகனப் பராமரிப்பு மற்றும் நிருவாகம் தொடர்பாக முறையான நடைமுறையொன்று காணப்படவில்லை. அத்துடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 ஆண்டின் போது ஜேர்மனி சர்வதேச உதவி (ஜீஐஇஸட்) அமைப்பில் இருந்து கிடைத்திருந்த ஓட்ட நிலையில் காணப்பட்ட வாகனத்தின் என்ஜின் வேறு ஒரு வாகனத்திற்கு பொருத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 185,000 தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும் 35 நாட்களுக்கு பின்னர் அந்த வாகனத்தின் ஒரு பகுதி (கிலச்) செயற்படாமையால் அதனை பாவனையில்

இருந்து அகற்றப்பட்டு 2016 ஆண்டின் போது கைதவிர்க்கப்பட்டு இருந்தமையால் செலவிடப்பட்ட ரூபா 185,000 பயனற்ற செலவொன்றாகும்.

(ஆ) 2007 ஆண்டு முதல் ஓட்டப்பட்டிருக்காத வாகனம் ஒன்று 2012 செப்தம்பர் மாதத்தின் போது ரூபா 194,950 தொகை செலுத்தப்பட்டு சாயம் பூசுதல் உட்பட திருத்த வேலைகள் மற்றும் பின்னர் இடையிடையே ரூபா 145,976 வரையான திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எனினும் ஓட்ட அட்டவணைகளின் பிரகாரம் திருத்த வேலைகளின் பின்னர் 102 கிலோமீற்றர் மாத்திரம் ஓட்டப்பட்டு இந்த வாகனம் கைதவிர்க்கப்பட்டிருந்தது.

(இ) 2007 முதல் 2014 ஆம் ஆண்டு வரை என்ஜின் திருத்த வேலைக்காக அனுப்பப்பட்டிருந்த வாகனம் ஒன்று 2014 ஆண்டின் போது ரூபா 1,683,500 செலுத்தப்பட்டு திருத்த வேலை மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2011 ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைக்கான மதிப்பீடு ரூபா 918,428 ஆகக் காணப்பட்டது. 2014 ஆண்டின் போது திருத்த வேலைக்காக ரூபா 765,072 தொகை மிகையாக செலுத்துவதற்கு நேர்ந்திருந்தது.

அதிகாரசபைக்குச் சொந்தமான ஒருகொடவத்ததையில் அமைந்துள்ள மோட்டார் வாகன பொறியியல் பயிற்சி நிலையத்தின் உதவியினை வாகன திருத்த வேலைகளுக்காக பெற்றுக்கொள்ள முடியுமாக இருக்கும் போது மற்றும் சாட்டுதல்கள் அடிப்படையில் வாகனப் பராமரிப்பு விடயங்களுக்காக உத்தியோகத்தர் ஒருவர் 2009 ஆண்டு முதல் சேவையில் ஈடுபடுத்தியிருக்கும் போது இந்த குறைபாடுகள் நேர்ந்துள்ளது.

5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

அதிகார சபையினால் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கை திட்டத்துடன் இணங்கக் கூடிய விதமாக செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைக் திட்டத்தில் நிதிசார் முன்னேற்றம் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5.2 உள்ளகக் கணக்காய்வு

2009 ஜூன் 09 திகதிய டீஎம்ஏ/2009(i) ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 133 இல் குறிப்பிட்டுள்ளவாறு உள்ளகக் கணக்காய்வு அலகு ஒன்று அமைக்கப்பட்டு 08 உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திட்டத்திற்கு இணங்க கணக்காய்வுகள் நடாத்துதல், பின்தொடர் நடவடிக்கைகள் மற்றும் சுட்டிக் காட்டியுள்ள விடயங்களை சரிசெய்தல் தொடர்பாக முகாமை கவனம்

செலுத்தப்படாமையால் அவ் அலகினை நடாத்துவதில் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்படவில்லை.

5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவுகள் உள்ளவாறான வருமானங்கள் மற்றும் செலவுகளுடன் இணக்கஞ் செய்யும் போது 10 சதவீதம் முதல் 369 சதவீதம் வரை முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துக் கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5.4 தீர்க்கப்படாதிருந்த கணக்காய்வு பந்திகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆண்டின் போது உலக இளைஞர் மாநாட்டிற்காக அமைச்சு சார்பாக அதிகார சபையினால் செலவிடப்பட்ட ரூபா 2,000,000 தொகை பெறவேண்டிய மீதியின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஒழுக்காற்று விசாரணையின் பின்னர் சேவையில் இருந்து நீக்கப்பட்ட அல்லது சேவை முடிவுறுத்திய ஊழியர் ஒருவர் அரச சேவையில் நியமனம் ஒன்று பெறுவதற்கு தகைமையற்றவராவதுடன் பண மோசடி ஒன்று தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு 2013 மே 08 திகதி வேலை இடைநிறுத்தப்பட்ட வேறு ஒரு நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஒருவர் அதிகாரசயின் பணிப்பாளர் (நிதி) பதவிக்கு இணைத்துக்கொள்ளப்பட்டிருந்தார்.

6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

	முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு		அவதானிப்புக்கள்
(அ)	களஞ்சியக் கட்டுப்பாடு	(i)	அனைத்து களஞ்சிய பண்டங்களின் கொள்வனவுகள் ஏடுகளுக்கு உட்படுத்தப்படாமை.

(ii) தொழில்தேர்ச்சி அபிசேக நிகழ்ச்சித் திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட களஞ்சியப் பண்டங்களில் கொள்வனவு தொடர்பாக களஞ்சியக் காப்பாளர்களின் மூலம் உறுதிப்படுத்தப்படாமை.

(ஆ) வாகனப் பாவனை

(i) தேவையான சந்தர்ப்பங்களில் வாகனங்களைப் பழுதுபார்த்தலுக்கு உட்படுத்தாமையால் வாகனங்கள் சிதைவுற்ற நிலையினை அடைதல்.

(ii) தமைமையுடைய உத்தியோகத்தர்களின் பரிசோதனை மற்றும் மதிப்பீடு ஒன்று இல்லாமல் வாகனங்கள் பழுதுபார்த்தல்களுக்கு ஈடுபடுத்துவதன் காரணமாக பயனற்ற செலவுகளை மேற்கொள்வதற்கு நேரிடுகின்றமை.

(இ) பதவியணியினர் நிருவாகம்

(i) கல்வி பதவியணியினர் போதியளவில் இணைத்துக்கொள்ளப்படாமையால் பயிற்சி வழங்குவதில் தடைகள் ஏற்படுகின்றமை.

(ii) இரகசிய தன்மை மற்றும் பாதுகாப்பு வழங்கும் வகையில் தனிப்பட்ட கோவைகள் பேணப்படல், ஒழுக்காற்று நடவடிக்கை நடத்துதல் மற்றும் அதனது தீர்மானங்கள் செயற்படுத்தாமை.

(ஈ) நிதி முகாமைத்துவம்

முறைமையான அங்கீகாரம் ஒன்று இன்றி நிதியங்கள் நடாத்துவதற்கு இடமளித்ததன் காரணமாக பணம் விளைவற்றுக் காணப்படுகின்றமை.

(உ) ஏடுகள் மற்றும் பதிவேடுகளை பேணல்

கட்டுபெத்த பொறியியல் பயிற்சி நிறுவனத்தின் மின்சார தொழில்நுட்ப பிரிவில் 800 பண்டங்கள் பொருட் பதிவேடுகளில் உட்படுத்தப்படாமை.

ஒப்பம் : டப்ளியூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபையின் 2015 திசெம்பர் 31ஆம் திகதியுடன் முடிவுற்ற வருடத்தின் நிதிக் கூற்று பற்றி, 1971ன் 38ம் இலக்க நிதிச்சட்டத்தின் 14(2) (சீ) வாசகத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைக்கான பதில்கள்

2.2 நிதிக் கூற்று தொடர்பில் கருத்து வெளியிடல்

2.2.1 கணக்கு குறைபாடுகள்

பணப் பரிமாற்ற கூற்று கடந்த வருடங்களில் மேற்கொண்ட விதத்திலேயே தயாரிக்கப்பட்டுள்ளது.

(அ) மானிப்பாய் பயிற்சி மையத்திற்கு 2016.05.09 ஆம் திகதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மே மாதம் குறித்த செலுத்துகை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இறுதி கணக்கு தயார்ப்படுத்தல் மேற்கொள்ளப்படும் போது இதற்குரிய ஆவணங்கள் நிதிப்பிரிவிற்கு கிடைக்கப்பெறாமையினால் அவை இறுதி கணக்குகளில் காட்டப்படவில்லை.

(ஆ) வவுச்சர் வெளியக கணக்காய்வு பிரிவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. வ.இல.216/15/Cap/3015 – 31/12/2015 (இணைப்பு 01). 99 வருட குத்தகைக்காக இது மூலதனமாக்கப்பட்டுள்ளது.

(இ) வெளியக நிறுவனங்களிற்கு விடுவிக்கப்பட்ட ஊழியர்களுக்கென செலுத்தப்பட்ட ஆனால் மீளப் பெற்றுக்கொள்ளப்படாத சம்பளத் தொகை, கிடைக்கப்பெற வேண்டிய தொகையின் கீழ் 2014ஆம் ஆண்டில் 283,163.40 ஆகவும் 2015ஆம் ஆண்டில் 650,181.56 ஆகவும் வருடாந்த நிதிக் கூற்றில் 5(5) ன் பக்க இலக்கம் 23ன் கீழ் காட்டப்பட்டுள்ளது. மேலும் குறித்த செலவினை மீளப் பெற்றுக்கொள்ளும் விதமாக குறித்த நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதை மேலும் அறியத்தருகின்றேன். (இணைப்பு 02).

(ஈ) வடக்கு கிழக்கு மாகாணங்களில் நடைபெற்ற கருத்தரங்குகளில் பங்குபற்றிய அதிகாரிகளுக்கான தங்குமிட வசதிகள் மட்டும் 2015ல் பயிற்சி செலவீனத்தின் கீழ் செலவுத் தலைப்பு இல்லாது வெவ்வேறு செலவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ள நிலையில் 2016ஆம் ஆண்டில் இச் செலவீனம் பயிற்சி செலவீனத்தின் கீழ் செலவுத் தலைப்புக்குள் செலவிடப்பட்டுள்ளதை அறியத்தருகின்றேன்.

(உ) ஆய்வாண்டில் மட்டுமல்லாது அனைத்து வருடங்களிலும் குத்தகை இடத்திற்கான குத்தகை கணிப்பானது கடனளிப்பு குத்தகை முறையின் அடிப்படையிலேயே கணிக்கப்படும். இணைப்பு இலக்கம் 04 கணக்குகளுக்கு உரியதான ரூபா.452,458 இடத்திற்கான கடனளிப்பு தொகையாகும்.

2.2.2 <u>சமப்படுத்தப்படாத கணக்குகள்</u>

வேறு நிதிகளில் உள்ள மிகுதிகளின் வேறுபாடு தொடர்பில் நிர்வாகக் குழுவின் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில் அவ் அனுமதிக்கமைவாக செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2.2.3 <u>கணக்காய்விற்கான சாட்சி இல்லாமை</u>

	விடயம்	பெறுமதி ரூபா.	
i	சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள்	902,143,338 (நினைவில் உள்ள பெறுமதி)	நிலையான சொத்து ஆவணம் தயார் செய்யப்பட்டு நிதிப்பிரிவில் காணப்படுகின்றது.
ii	சொத்து ஆலை மற்றும் உபகரணங்கள் என்பனவற்றின் வருடாந்த கொள்வனவு	66,310,302	விபரமான உப ஆவணம் (குறிப்பு இலக்கம் 02) கணக்காய்விற்கு முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் அந்த குறிப்பில் உரிய இலக்கத்திற்கு ஏற்ப வகைப்படுத்தி அந்த வருடத்திற்குரிய புதிய கொள்வனவின் (Additions during the year 2015) கீழ் பொருள் விபரம், அளவு, கொள்வனவு செய்த திகதி, செலவு என்பன குறிப்பிடப்பட்டுள்ளது.
iii	வருடாந்த மிகுதி	143,822,779	வருடாந்த மிகுதியை வேறுபடுத்துவதும் மேலே இலக்கம் (II) ன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள படி அவ் வகைப்படுத்தலுக்கு அமைவாக விபரமாக காட்டப்பட்டுள்ளது.
iv	மிகுதி சமப்படுத்தல்	1,298,321	மேலே இலக்கம் (II) ல் காட்டப்பட்டுள்ள குறிப்பு இலக்கம் (2) உப பிரிவிலே விபரங்கள் அடங்கியுள்ளன.
v	சொத்து ஆலை மற்றும் உபகரணங்களின் சமப்படுத்தல்கள்	388,781	மேலே இலக்கம் (II) ல் காட்டப்பட்டுள்ள குறிப்பு இலக்கம் (2) உப பிரிவிலே விபரங்கள் அடங்கியுள்ளன.
vi	சொத்து ஆலை மற்றும் உபகரணங்களின் சமப்படுத்தல்களை அகற்றுதல்	11,219	மேலே இலக்கம் (II) ல் காட்டப்பட்டுள்ள குறிப்பு இலக்கம் (2) உப பிரிவிலே விபரங்கள் அடங்கியுள்ள நிலையில் அதற்கு மேலதிகமாக தயாரிக்கப்பட்ட ஆவணமொன்று நிதிப் பிரிவிலே காணப்படுகின்றது.

2.3 <u>கிடைக்கப்பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்</u>

(அ) ஆய்வாண்டில் செலுத்தப்பட வேண்டிய தொகை ரூபா. 56,146,514.48 ஆகும். 2016.11.20ஆம் திகதிக்கு செலுத்தப்பட வேண்டிய தொகை கீழ்வருமாறு.

5 வருடங்களுக்கு முன்னரான மிகுதி	-	2,135,373.58
3-5 வருடங்களுக்கு இடையிலான மிகுதி	-	2,302,122.86
1-2 வருடங்களுக்கு இடையிலான மிகுதி	-	31,878,388.62
மொத்தம்	-	36,315,885.06

அதில் 2014 SSDP திட்டத்தில் 2014ஆம் ஆண்டுக்கென குறைக்கப்பட்ட மீளப்பெறல் அல்லாத நிதி ரூபா. 29,980,878.98 ஆகும். அதனை அகற்றிய பின்னர் தற்போது தீர்க்கப்படாது செலுத்தப்படவுள்ள மிகுதியாவது ரூபா. 6,335,006.08 என அறிவிக்கின்றேன்.

(ஆ) 2015 திசெம்பர் ஆகும் போது மிகுதியாக இருந்த செலுத்தப்படவேண்டிய தொகை ரூபா. 56,146,515 ல் 2016 ஒக்தோபர் ஆகும் போது ரூபா. 14,049,965 சரிப்படுத்தப்பட்டு ரூபா. 42,096,550 மட்டும் மிகுதியாக உள்ளது.

(இ) சேவையினை இடையில் விட்டுச் சென்ற ஊழியர்களின் சட்ட நடவடிக்கைகள் முற்றுப்பெறாமை இதற்கு காரணமாகியது. (2014 முன் கணக்காய்வில் புதுப்பிக்கப்பட்டுள்ளது)

(ஈ) ஆய்வாண்டில் கடன் பெறும் தொகை ரூபா. 13,136,958.21 ஆகின்ற நிலையில் 2016.11.20ஆம் திகதியில் கடன் பெறும் தொகை கீழ்வரும் அடிப்படையில் காட்டப்பட்டுள்ளது.

5 வருடங்களுக்கு மேலான தொகை	-	89,688.00
3-5 வருடங்களுக்கு இடையிலான மிகுதி	-	4,883,124.86
1-2 வருடங்களுக்கு இடையிலான மிகுதி	-	383,245.38
சமப்படுத்தப்படாத மிகுதி	-	5,356,058.24

(உ) ஆய்வாண்டிற்குரிய சமப்படுத்தப்படாத உள்ளக கடன் செலுத்துகைக்கான மிகுதி ரூபா. 1,971,776.13 ஆகும். மேலும் 5 வருடத்திற்கு மேற்பட்ட கடன் பெறுவதற்கான தொகை ரூபா. 89,688.00 ஆகும்.

(ஊ) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

2.4 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

(அ) நிதி முதலீடு செய்வதற்காக நிதி அமைச்சின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

(ஆ) (i), (ii), (iii) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

(iv) முன்னாள் தவிசாளரின் மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் அறிவுறுத்தலின் பேரில் இது அலுவலக நேரத்தின் பின் நிறுவன அறிவு மற்றும் பயிற்சிகளற்று மேற்கொள்வதனால் 10% பணத்தை கழிக்கப்படாதிருக்க பணிப்பாளர் நாயகம் மற்றும் தவிசாளர் அனுமதி வழங்கியிருந்தனர். (இணைப்பு 03)

(v) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

(இ) (i), (ii), உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

(iii) கடந்த காலத்தில் ஊழியர் பற்றாக்குறை காணப்பட்ட நிலையில் புதிய ஆட்சேர்ப்புகளின் காரணமாக இந் நிலை மீண்டும் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(iv) (v) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

(இ), (உ), (ஊ) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

(எ) பணிப்பாளர் சபை முடிவின்படி இது மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் அதற்கேற்ப நிதிப் பிரிவு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கும். (இணைப்பு 04)

(ஏ) (i), (ii)

தேசிய நிறுவனங்கள் மற்றும் பிரதான அலுவலக வைப்புகள் தொடர்பில் முழுமையான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு வரும் நிலையில் எதிர்காலத்தில் திறைசேரியின் அறிவுறுத்தலின்படி நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பில் நிர்வாக குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

3.

3.1 (அ), (ஆ) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

3.2 (அ), (ஆ) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

4.

4.1 (அ), (i), (ii) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

(இ) 2015ஆம் ஆண்டின் செயற்திட்டத்தின்படி நிறைவேற்றப்பட்டிராத மற்றும் போதுமான அளவில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை எனப்படும் செயற்பாடுகள்

(i), (ii), (iii), (iv), (v), (vi) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

(vii) 8 வியாபார திட்டங்கள் திட்டமிடப்பட்டு 2015ஆம் ஆண்டில் செயற்படுத்துவதற்கு இருந்த பயிற்சி மத்திய நிலையம் சார்ந்த வியாபார திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை என்றும் புதிய திட்டங்களுக்கென 2016ஆம் ஆண்டிற்கு 2015ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படாத திட்டங்களை மீண்டும் செயற்படுத்துமாறு SSD திட்டத்தினூடாக அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

(viii), (ix), (x), (xi), (xii) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

(ஈ) (i), (ii), (iii) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

4.2 முகாமைத்துவ நடவடிக்கைகள்

(அ) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

(ஆ) 2016 நவம்பர் மாதம் முதல் குறித்த அதிகாரிகளுக்கு சம்பளப் பணம் பெற்றுக்கொள்வதற்காக கணக்கு இலக்கம் நிதிப்பிரிவிற்கு வழங்குமாறு மீண்டும் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

(இ), (ஈ), (உ), (i), (ii), (iii), (iv) (ஊ), (எ) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

(அ) (ஆ) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

(ஈ) (i) கட்டுமான வினைஞர்கள் 250 பேருக்கு 25 மதிப்பீட்டாளர்கள் அளவிலும் அழகுக்கலை நிபுணர்களுக்கு 19 மதிப்பீட்டாளர்கள் அளவிலும் அழைக்கப்பட நேர்ந்தது. குறித்த மாவட்டங்களின் உள்ளே இவ் அளவிலான மதிப்பீட்டாளர்களை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் தூர பிரதேசங்களில் இருந்து அவர்கள் வருகை தந்ததால் அவர்களுக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க நேர்ந்தது. காலி மாவட்ட அலுவலகத்தினால்

ஹோட்டல் முன்பதிவு செய்யப்பட்டிருந்த நிலையில் இனிவரும் காலங்களில் பெயர்பட்டியலை பெற்றுக்கொள்ள உரிய பிரிவுகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன.

(ii) இது தொடர்பில் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அதன் சிபாரிசுகளின்படி எதிர்கால நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(iii) சகல பொருட்களின் விலைகளையும் சமர்ப்பித்து முழு நிகழ்விற்குமென குறைந்த விலைகளை கொண்டிருந்த விலைமனுவிற்கு குறித்த செயற்திட்டத்தை வழங்குவதற்கு தொழில்நுட்ப குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டது.

(iv) எதிர்காலத்தில் இவ்வாறான நிகழ்வுகளை ஒழுங்கு செய்யும் போது பொருட்களை பெறல், பயன்படுத்தல் தொடர்பான விடயங்களுக்காக சுயாதீன அலுவலர் ஒருவரை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள நிலையில் RPL வேலைத்திட்டம் தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணை ஒன்றும் நடைபெற்று வருகின்றது.

அத்துடன் 8×8 டைல் ஓடர் செய்து பெற்றுக்கொள்ளப்பட்டது. (இணைப்பு 05)

(v) இது தொடர்பில் ஆரம்பகட்ட விசாரணை ஒன்று நடைபெற்று வருகின்றது. (இணைப்பு 06–A,B,C)

4.4

(அ) (i), (ii), (iii) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

4.5 (அ) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

(ஆ) கொள்வனவு வழிகாட்டல் ஊட்டத்தின் 2.14.1 ற்கு உரிய 2014.07.14 திகதிய 28ஆம் இலக்க திருத்தத்தின் ஊடாக நிறுவன பிரதானிக்கு உரித்தான பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும் வரம்பு ரூபா. 250,000 தொடக்கம் ரூபா. 500,000 வரை அதிகரிக்கப்பட்டுள்ளது. பிரதி இதனுடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 06 A,B)

(இ) ஓர்டர் செய்யப்பட்ட கணினிகள் பிரதான அலுவலகத்தின் வெவ்வேறு பிரிவுகளுக்கு மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அதன்படி 7 பொருள் பெறுகை பத்திரங்களின் ஊடாக பொருட்களை பாரமேற்றல் செயற்பாடு நடைபெற்றது.

(அ), (ஆ), (இ), (i), (ii), (iii), (v) (உ) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

4.8 உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

4.9 உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

4.10 (அ), (ஆ) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

4.11 உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

4.12 (அ), (ஆ), (இ), (ஈ), (ஊ), (ஏ) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

(உ) 2015ஆம் ஆண்டினுள் இவ்வாறான பரிமாற்றங்கள் நடைபெற்றிருக்கவில்லை.

(எ) மாவட்ட அதிகாரிகளின் 2013, 2014 மற்றும் 2015ஆம் ஆண்டிற்கு கழிக்கப்பட வேண்டிய ஊதியமற்ற விடுமுறை பணம் ரூபா. 433,856.45 ஆகும். அவரின் ஊதியத்திற்கேற்ப மாதமொன்றிற்கு கழிக்கக்கூடிய உயர்ந்தபட்ச தொகை ரூபா. 36,000 ஆகின்ற நிலையில் எனது அனுமதியின் பேரில் 2016 ஒக்தோபர் மாதம் முதல் ரூபா. 36,000 படி கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

4.13 (i), (ii), (iii), (iv), (v) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

5. கணக்கு நடவடிக்கைகள் மற்றும் நல்லாட்சி

5.1 முன்னேற்ற அறிக்கை நிரல் அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள மாதிரிப் பத்திரத்திற்கு ஏற்ப அனைத்து காரணிகளையும் உள்ளடக்கி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கிடல் ஆனது செயற் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலையில் நிதி முன்னேற்றத்தை வெளிப்படுத்தக்கூடியதாவது குறித்த முன்மொழிவுகளை செயற்படுத்தியதன் பின்னரேயாகும்.

5.2 உள்ளக கணக்காய்வு பிரிவின் ஊடாக சமர்ப்பிக்கப்படும் விசாரணைகள் தொடர்பில் அவதானம் செலுத்தி முன்மொழிந்த செயல்வடிவங்கள் மற்றும் சரிப்படுத்தல் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும், கணக்காணித்தல் செய்வதற்கும் குறிப்பு இடப்பட்டது.

5.3 உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

5.4 <u>தீர்க்கப்படாத கணக்காய்வு பந்தி</u>

(அ) உலக இளைஞர் மாநாட்டிற்கென செலவிடப்பட்ட, அமைச்சினால் கிடைக்கப்பெற வேண்டிய நிதி கிடைக்கப்பெறுதல் தொடர்பில் நிரந்தர முடிவொன்றிற்கு வர முடியாமை மற்றும் அமைச்சு மாற்றம் போன்ற காரணங்களின் அடிப்படையில் அதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை என 2014 14-2 (சீ) கணக்காய்வு அறிக்கைக்கும் பதிலளிக்கப்பட்டிருந்தது. (இணைப்பு 07)

(ஆ) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

6. (அ) எதிர்காலத்தில் இது தொடர்பில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாமலிருக்க உரிய பிரிவுகளுக்கு அறிவுறுத்தல் செய்யப்பட்டுள்ள நிலையில் அவ்வாறு செய்யாதிருக்க மாத்தறை RPL வேலைத்திட்டத்திற்கென கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் சரக்கு பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது. அதே போன்று சகல கொள்வனவுகளும் களஞ்சியசாலை ஊடாக மேற்கொண்டு ஆவணப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(அ), (இ) உரிய பிரிவுகள் பதில்களை முன்வைக்காத காரணத்தால் தங்களுடைய கண்காணிப்பிற்கு நானும் இணங்குகின்றேன்.

(ஈ) திறைச்சேரியின் அனுமதிக்கு உட்பட்டு எதிர்காலத்தில் நடாத்திச் செல்லப்படும் நிதியங்களின் ஊடாக உச்ச பயனை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.